விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 364 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 02 செவ்வாய்க்கிழமை (17.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழர்களின் அபிலாஷைகளை

# இலங்கை நிறைவேற்றும் என நம்புகின்றோம்

## அநுர முன்னிலையில் ஊடகங்களிடம் மோடி

- மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.
- அரசியலமைப்பை முழுமையாக அமுலாக்க வேண்டும்.
- யாழ்.பல்கலை, கிழக்குப் பல்கலையைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு மாதாந்தப் புலமைப்பரிசில்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*



## இலங்கை வாருங்கள்

### மோடிக்கு அநுர நேரில் அழைப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கு 15

## யாழில் பேருந்தில் பயணித்தவர்

### சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் பேருந்தில் பயணித்த ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது-72) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பிரஸ்தாப நபர் 15

## இந்தியாவின் பாதுகாப்பைப் பாதிக்கும் வகையில் இலங்கை மண் பயன்படுத்தப்படாது

### மோடியிடம் ஜனாதிபதி அநுர உறுதி

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணைப் பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

விற்கும் இந்திய 15



## யாழ்.பெரியவிளானில்

### பேருந்து மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெரியவிளானில் பேருந்து மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த மோஷஸ் பாக்கியநாதன் (வயது-76) என்பவரே உயிரிழந்தவராவார்.

பெரியவிளான் பற்றிமா தேவாலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம்

ஞாயிற்றுக்கிழமை 15

## தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே பயணிகள் கப்பல் சேவை

### மோடி – அநுர கலந்துரையாடலில் தீர்மானம்

(புதுடில்லி)

தலைமன்னார் - இராமேஸ்வரம் வரையான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - சென்னை

விமான சேவை, நாகப்பட்டி 15

## யாழைச் சேர்ந்த இளம் யுவதி இரணைமடுச் சந்தியில் கடத்தல்

### வான் ஒன்றில் வந்த குழு அட்டகாசம்

(முறிகண்டி)

வானில் வந்த இனந்தெரியாத குழுவினால் யாழைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரணைமடுச்சந்தி கனகாம்பிகைக்குளம் முன்பாக நேற்று மாலை 6 மணியளவில் இச்சம்பவம் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் புன்னா 15

## கண்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர்

### முல்லை கொக்கிளாயில் அடித்துப் படுகொலை

(முல்லைத்தீவு)

கண்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கண்டியைச் சேர்ந்த சுந்தரராஜ் (வயது-38)

என்பவரே உயிரி 15

## ரணிலும் இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள

நிலையில், முன்னாள் 15

## தெல்லிப்பழையில் சளிக்கு மருந்து எடுத்த பெண் மரணம்

### மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)


அதீத சளி காரணமாக வைத்தியசாலை சென்று மருந்து எடுத்துவிட்டு வீடு திரும்பிய குடும்பப் பெண் ஒருவர் திடீரென உயிரிழிந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் தெல்லிப்பழை பகுதியில் பதிவாகியுள்ளது.

மாவை கலட்டி தெல்லிப்பழை ஸ்ரீயைச் சேர்ந்த செல்வரூபன் அருள்வாணி (வயது-44) என்ற மூன்றுகுழந்தைகளின் தாயாரே உயிரி 16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை பத்திரிகை பேரவையின் 69 ஆவது ஆண்டு விழாவில் சிரேஷ்ட ஊடக வியலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான அல்ஹாஜ் என்.எம்.அமீன் அவர்களுக்கு சுகாதார அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ அவர்களின் தலைமையில் இன்று மாலை 3 மணிக்கு கொழும்பு - 07, சுதந்திர மாவத்தை, இலங்கை மன்றக் கல்லூரி, கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கும் ஊடக கௌரவ விருது விழாவில் D.F.Kariyakarawana Memorial Journalism Awards-2024 விருது வழங்கி கௌரவிக்கப்படவிருப்பதையிட்டு பாராட்டி வாழ்த்துகிறோம். மேலும் அல்லாஹ்வின் கிருபையால் பல கௌரவ விருதுகள் பெற்று நோயின்றி நீடூழி வாழ்கவெனவும் வாழ்த்துகிறோம். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

**கலாபூஷணம் பரீட் இக்பால், நிர்வாகக் குழு உறுப்பினர்**
**SRI LANKA MUSLIM MEDIA FORUM**

(C-1821)

# கண்ணீர் அஞ்சலி




எமது பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி **இ. தனுஷா** அவர்களுடைய அன்புத் தாயார்

## அமரர் இராசரத்தினம் ஞானேஸ்வரி

அவர்கள் 16.12.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-1812)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## பளைநகர பொதுச் சந்தை 12 கடைத் தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 17.12.2024 தொடக்கம் 30.12.2024 பிற்பகல் 2மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 30.12.2024 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 30.12.2024 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பளை நகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-07 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 2. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 3. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 4. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |


**நிபந்தனைகள் : -**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 30.12.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்திரகுத்தகைதாரருக்கு, ஒருவருக்கு (ஒரு குடும்பத்திற்கு) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

17.12.2024

# இந்திய உப ஜனாதிபதியுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் இந்திய உப ஜனாதிபதி ஜக்தீப் தன்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

பொருளாதார ஒத்துழைப்பு, விவசாயம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற விடயங்கள் குறித்து இதன் போது ஆராயப்பட்டது. (ம-7)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான அபிவிருத்தித் திட்டம்

1978ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட இல 41 இன் கீழ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2185/14 இலக்க 2020.07.24 திகதிய வர்த்தமானி பத்திரிகையில் நகர அபிவிருத்தி பகுதியாக பிரகடனப் படுத்தப்பட்டதன் பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான அபிவிருத்தித் திட்டம் பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறும் முகமாக சபையின் தலைமைக்காரியாலயம், உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்கள் என்பவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சபையின் இணையத்தளத்திலும் முகநூல் பக்கத்திலும் காட்சிப்படுத் தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

ஆர்வமுள்ள பொது மக்கள் மற்றும் சபை அபிவிருத்தியில் அக்கறையுள்ள தரப்பினர் மேற்படி திட்டத்தினை பார்வையிட்டு எதிர்கால நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களினை எதிர்வரும் 2025.02.17ஆம் திகதிக்கு முன்னராக எழுத்து மூல முன்மொழிவாக சபையின் தலைமை அலுவலகத்திற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இத் திட்டத்தின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் வலிகாமம் கிழக்குப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட வுள்ளதனால் அது தொடர்பில் சகல பொது மக்களும், பொது அமைப்புக்களும் நிறுவனங்களும் அக்கறை செலுத்தி செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


**இணையத்தளம் :**
**https:/valikamameast.ps.gov.lk**
**முகப்பு புத்தகம் :**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**ஈ.மெயில் :**
**secveps@yahoo.com**


**இ.பகீரதன்**
**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

17.12.2024 (C-1820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவுக்கு அமோக வரவேற்பு





(டில்லி)

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, நேற்று திங்கட்கிழமை புதுடில்லியில் அமைந்துள்ள ராஷ்டிரபதி பவனில் சம்பிரதாயபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதி பவனில் வரவேற்றனர்.

இங்கு ஜனாதிபதி அநுரகுமார, ஒன்றிணைந்த இந்திய பாதுகாப்பு சேவையினரின் கௌரவிப்பு மரியாதையை பார்வையிட்டார்.

இதன்போது, இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் தத்தமது அமைச்சர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளுக்கு ஒருவரையொருவர் அறிமுகம் செய்து வைத்தனர்.

இலங்கை ஜனாதிபதி டிசம்பர் 15 முதல் டிசம்பர் 17 வரை இந்தியாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பரில் பதவியேற்ற பின்னர் அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவிற்கு மேற்கொள்ளும் முதலாவது இருதரப்பு விஜயம் இதுவாகும். (நி-8)

## கல்வித் தகைமையில் மோசடி நாமல் மீது முறைப்பாடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, சட்டம் தொடர்பான தனது உயர்நிலை கல்வித் தகைமையை மோசடியான முறையில் பெற்றுக் கொண்டதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாட்டை பதிவு செய்யப்பட்டுள்ளது.

லஞ்சம், ஊழல் தொடர்பான அதிகார சபையின் தலைவர் ஜமுனி கமந்த துஷாரவினால் நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் மேற்படி முறைபாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜமுனி கமந்த,

பரீட்சை தினத்தன்று நாமல் ராஜபக்ஷ மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக அன்றையதினம் அவருடன் பரீட்சைக்கு தோற்றிய இளைஞர் ஒருவர் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

குறித்த இளைஞர் அன்றைய தினம் பரீட்சை கடமையில் இருந்த மண்டபத் தலைவர், சட்டக்கல்லூரி அதிபர், பதிவாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.அவர்கள் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

தமிழர் தாயகத்தின் முதன்மை நாளிதழ்
அதிக வாசகர்கள்
அதிக விற்பனை
உங்கள் வலம்புரி
25 ஆண்டு நிறைவில்
வெள்ளி விழாக் காண்கிறது
இடம் : நல்லூர் துர்க்கா மணி மண்டபம்
காலம் : 20.12.2024 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 மணி
வெள்ளிவிழாவில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி அழைக்கின்றோம்.

தலைவர்
திரு. சிவஞானம் வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குநர் - வலம்புரி)
பிரதம விருந்தினர்
வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்
வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(பெருந்தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)
உயர்திரு இ.இளங்கோவன்
(பிரதம செயலாளர், வடக்கு மாகாணம்)
வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா
(பொது வைத்திய நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை)
உயர்திரு.ந.தெய்வேந்திரராஜா
(ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)
கலாநிதி செ.சேதுராஜா
(ஓய்வு நிலை அதிபர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி)
ஆசியுரைகள்
ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
(ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)
சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள்
(தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)
கலாநிதி ஆறு. திருமுருகன்
(தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்
(இயக்குநர், பிசப் சௌந்தரம் மீடியா சென்ரர்)
அஷ்ஷெய்க் மௌலவி எம்.ஏ. பைஸர்
(காசிமி, மதனி)
நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தல்
செந்தமிழ்ச் சொல்லருவி திரு.ச.லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
வலம்புரிக் குடும்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 7 ரன்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ரி-20 ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுகிறது. முதல் ரி-20 ஆட்டம் செயின்ட் வின்சென்ட்டின் கிங்ஸ்டவுனில் அமைந்துள்ள அர்னோஸ் வேல் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக சௌமியா சர்க்கார் 43 ரன்கள் எடுத்தார். பின்னர் மிக எளிய இலங்கை துரத்திய மேற்கிந்திய தீவுகள் அணியில் கப்டன் ரோவ்மன் பவலைத் தவிர யாரும் நிலைக்கவில்லை.

அதிரடியாக ஆடிய அவர் 35 பந்துகளில் 60 ரன்கள் குவித்தார். எனினும் மேற்கிந்திய தீவுகள் அணியால் வெற்றி பெற முடியவில்லை. அந்த அணி 19.5 ஓவர்களில் 140 ரன்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (6-8)

## ஷகிப் பந்து வீசத்தடை

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு டெஸ்ட் மற்றும் சர்வதேச இருபதுக்கு 20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இதனையடுத்து, இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் நடத்தும் உள்ளூர் போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடி வந்தார்.

இந்தப் போட்டிகளில் பந்து வீசும் முறை விதிகளுக்கு மீறியதாக இருப்பதாக ஷகிப் மீது குற்றச்சாட்டு எழுந்தது.எனவே, இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்து அதற்கான சோதனையில் இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் ஈடுபட்ட நிலையில், உண்மையில் பந்து வீசியதில் ஷகிப் அல் ஹசன் விதிகளை மீறியது தெரியவந்தது.

இதனையடுத்து, அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதன்படி, பங்களாதேஷ் வீரர் ஷகிப் அல் ஹசன் பந்து வீசுவதிலிருந்து இடைநீக்கம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஐ.சி.சியினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச அனைத்து கிரிக்கெட் போட்டிகளிலும் அவருக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (6-8)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3277

### சாகிரா




### மாதுமை




### கரிஷ்னி




### சானுயன்




### காருண்யா




### மிதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய அமைச்சரை சந்தித்தார் குகதாசன் எம்.பி



(திருமலை)

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் கனேடிய நடுவண் அரசின் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கரி ஆனந்த சங்கரியை சந்தித்தார்.

இதன்போது அவர், இலங்கை தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சிக்கல்களைப் பற்றி அமைச்சருடன் கலந்துரையாடினார். (நி-8)

# மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது (2024) எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் இப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்து, பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் பரீட்சை தொடர்பில் யாராயினும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் பரீட்சார்த்திகள் நாளை முதல்-20 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அலுவலக நேரத்தினுள் 021 221 9939 என்ற மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப்பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (6-8)


## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்ப காலம் நீடிக்கப்படல் தொடர்பானது

சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் தொடர்பாக 29.11.2024 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தின் விண்ணப்ப முடிவுத்திகதி மேலும் 23.12.2024 ஆம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-1816)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
07 . 10 . 1947

மறைவு
15 . 12 . 2024

**எமது நண்பன் கபிலனின்**
**அன்புத் தந்தையார்**

## அமரர். குமரேசு காந்தரூபன்

**(அளவெட்டி)**

அவர்கள் காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.இந்துக்கல்லூரி,**
**2002 உயர்தரப்பிரிவு நண்பர்கள்.**

(2772)

# இராசிபலன்

17.12. 2024
மார்கழி 02, செவ்வாய்க்கிழமை
துதியை பிற்பகல் 1.10 மணிவரை

புநர்பூசம் பின்னிரவு 3.30 மணிவரை
சுபநேரம் -10.52-12.22 மணிவரை
இராகுகாலம் 3.22-4.52 மணிவரை

சந்திராஷ்டமம் - அனுசம்

**வளவன்**

**மேஷம்** — ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**கடகம்** — பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செய்திகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**துலாம்** — விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** — கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**ரிஷபம்** — செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — உன்னதமான உறவுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சிறப்பான நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** — வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் தடை தாமதம் என்பன ஏற்படலாம்.

**கும்பம்** — பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** — எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**கன்னி** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆனந்தமான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**அறிவும் ஒழுக்கமும் ஒரு வண்டியின் இரண்டு சக்கரங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

### சந்தைகள் இறைச்சிக்கடைகள் ஆகியவற்றுக்கான 2025.01.01- 2025.12.31 வரையிலான காலப்பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி, மீள் கேள்வி அறிவித்தல்-2025

1. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2024.12.17 இல் இருந்து 2024.12.23 ஆம் திகதி 3.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2024.12.24 காலை 10.00 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2024.12.24 காலை 10.00 மணி
   வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 2024.11.09 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி, மீள் கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் விபரம் குறிப்பிட்டு, "செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி" என்ற முகவரியிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிட்டு கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியினுள்ளே கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியை ஏக காலத்திலேயே "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பதாரி அனுப்புதல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் எவராயினும் ஒருவர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணத்தை கொண்டு வருவதுடன், அவ் ஆவணத்தின் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. உரிய நிதி ஆண்டின் கேள்வித்தொகையை சம மாத தவணைக்கட்டணத்தில் 1/3 பகுதியை முற்பணமாக 2024.12.31ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னரான மாதாந்தங்களுக்குரிய சமதவணைக் கட்டணங் களை அடுத்துவரும் மாதம் 10 திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும். காலதாமதமாக தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படின் 10 சதவீத தண்டத்துடன் செலுத்த வேண்டும். முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாத தவணைக்கட்டணமாக கருதி கணக்கு சீர் செய்யப்படும்.
7. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை – 2025 ஆம் ஆண்டுக்கான சந்தைக் கேள்வி**

| தொ.இல | குத்தகை விபரம் | 2025 ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | | | |
| 1 | அந்திரான் புதிய மரக்கறி சந்தை ( 3 கடைகள் தவிர ) | 138,051.10 | 1,380.51 | 500.00 | |

**மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை – 2025 ஆம் ஆண்டுக்கான சந்தைக் கேள்வி**

| தொ. இல | குத்தகை விபரம் | 2025 ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | | | |
| 1 | நெல்லியடி மீன் சந்தை | 526,887.90 | 5,268.88 | 500.00 | |
| 2 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 462,963.60 | 4,629.64 | 500.00 | 500.00 |
| 3 | நெல்லியடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 56,034.00 | 560.34 | 500.00 | 500.00 |
| 4 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 275,319.00 | 2,753.19 | 500.00 | 500.00 |
| 5 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,995,345.00 | 19,953.45 | 500.00 | 500.00 |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | | | |
| 6 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 212,256.00 | 2,122.56 | 500.00 | 500.00 |
| 7 | நவிண்டில் சந்தை | 33,165.00 | 331.65 | 500.00 | |
| 8 | நவிண்டில் சந்தை கோழிக்கடை | 70,290.00 | 702.90 | 500.00 | 500.00 |
| 9 | மண்டான் சந்தை | 47,520.00 | 475.20 | 500.00 | |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | | | |
| 10 | துன்னாலை வடக்குச் ஆட்டிறைச்சிக் கடை | 50,430.60 | 504.31 | 500.00 | 500.00 |

குறிப்பு :
அந்திரான் புதிய மரக்கறி சந்தை குத்தகை பெறுவதற்கு தெரிவுசெய்யப்படும் கேள்விதாரரால் கோரப்படும் குத்தகை பெறுமதி விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் பெறுமதியை விட குறைவாகக் காணப்படின் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு பெறுமதியே குத்தகை தொகையாகக் கருதப்படும் .
தொடர்புக்கான தொலைபேசி இல:

தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கட்டைவேலி உப அலுவலகம் : 021 226 1244

கடமை நேரம்
மு.ப. 8.30 - பி.ப. 16.15 வரை

**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,**
**கரவெட்டி.**

17.12.2024

(C-1817)

# LOLC யின் யாழ்.கிளை புதிய வளாகத்திற்கு மாற்றம்



LOLCஃபைனான்ஸ் யாழ்ப்பாணம் மெட்ரோ கிளை அதன் சொந்த புதிய வளாகத்திற்கு கடந்த 4 ஆம் திகதி மாற்றப்பட்டு திறந்து வைக் கப்பட்டது.

LOLC ஃபைனான்ஸ் பிஎல்சி, அதன் யாழ்ப்பாண மெட்ரோ கிளையை, யாழ்ப் பாணம், மருத்துவமனை வீதி, இல. 584 இல் உள்ள தனது சொந்த வளாகத்திற்கு மாற்றிய மைத்துள்ளது.

**விளம்பர விபரணம்**

இந்த திறப்பு விழாவில், LOLC ஃபைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி கிரிஷான் திலகரத்ன மற்றும் LOLC ஃபைனான்ஸ் பிஎல்சி இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி மொன்டினி வர்ணகுல ஆகியோரின் பங்குபற்றுதலின் மூலம் இந் நிகழ்வு நடை பெற்றது.

புதிதாக இடமாற்றம் செய் யப்பட்ட யாழ். கிளையானது நெகிழ்வான சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகள், தங்கக் கடன்கள், பெருநிறுவனக் கடன்கள், மூலதன குத்தகை, மாற்று நிதித் தீர்வுகள் மற்றும் நுண் நிதியளிப்பு உள்ளிட்ட விரிவான நிதிச் சேவைகளை தொடர்ந்து வழங்கவுள்ளது.

# யாழில் இடம்பெற்ற கலாசார நடைபயணம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் வடமாகாண அமைச்சின் எற்பாட்டில் "சுற்றுலாவினை மேம்படுத்தி எதிர் காலத்தில் மாற்றத்தினை உருவாக்குவோம்" என்னும் கருப் பொருளில் உலக சுற்றுலா தின கலை, கலாசார வாகன ஊர்தி நடை பயண நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இவ் வாகன ஊர்தி நடை பயணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமாகி அங்கியிருந்து யாழ்.போதனா வைத்தியசாலை வீதி, கே.கே.எஸ் வீதி ஊடாக சென்று பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் இனிதே நிறைவடைந்தது.

கலாசார நிகழ்வுகளான மேள்தாள, நாதஸ்வர இசைகள், சிறுவர் நடனங்கள், கோலாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள் ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

மேலும் வாகன பவனியில் 1968 தொடக்கம் 2001ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மாதிரி புகையிரத வண்டி என்பன ஈடுபட்டன.

இதில் முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், வட மாகாண சுற்றுலாப் பணியகம், வடமாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சபாநாயகராக கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன

## அநுர கட்சி தீர்மானம்



(கொழும்பு)

அசோக ரன்வலவால் வெற்றிடமான பாராளுமன்ற சபாநாயகர் பதவிக்கு கலாநிதி ஜகத் விக்ரமரத்னவை நியமிக்க தேசிய மக்கள் சக்தியின் அரசியல் உயர்பீடங்கள் தீர்மானித்துள்ளதாக நேற்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவரது பெயர் கட்சியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று சபாநாயகர் பதவி வெற்றிடத்தை அறிவிக்கும் போது பாராளுமன்ற கூட்டத் தொடரின் தொடக்கத்தில் முன்மொழியப்படும்.

எதிர்க்கட்சியினாலும் சபாநாயகரின் பெயர் முன்மொழியப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்திருந்த போதிலும் அது நெறிமுறையற்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வேறு பெயர் பரிந்துரைக்கப்பட்டால் அந்தப் பெயரை தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்றார்.

அவர் பொலநறுவை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மக்கள் சக்தியின் கீழ் 51 391 விருப்பு வாக்குகளைப் பெற்று அந்த மாவட்டத்தின் விருப்பு பட்டியலில் இரண்டாவதாக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மருந்து இறக்குமதியில் சரிவு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டு சுமார் 2,000 எண்ணிக்கையிலான மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு வெறும் 750, ஆக குறைந்துள்ளது.

இது 62.5% குறைப்பைக் குறிக்கிறது. அதிகாரிகள் உரிய கொள்முதல் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதால் மருந்துகளைப்பெறுவதில் தாமதம் ஏற்படுவதே இதற்கு காரணமாகும்.

கொள்முதல் குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய அதிகாரிகள் நடைமுறை முடிவுகளை எடுக்கத் தயங்கி வருகின்றனர்.

எனினும் மருத்துவ அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டபடி தற்போது நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளின் நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. எனினும், கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது காணப்பட்ட மோசமான நிலைமையை மருந்துப் பற்றாக்குறை இன்னும் எட்டவில்லை.

இந்தநிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)


## ASIRI CENTRAL HOSPITALS LIMITED-PQ 96BP
## LOSS OF SHARE CERTIFICATES

An application has been received by the Board of Directors of the above Company for the issue of the follwing Duplicate Share Certificate, the original of which is reported to have been lost or misplaced.

| Name | Share Certificate No | No.of shares |
|---|---|---|
| Mr.Sivasubramaniam Raveendra Mrs,Sivamalar Raveendra | 20212669 | 43 |

NOTICE IS HEREBY GIVEN that if within 14 days here of no claims are made to or no objections are lodged with the Directors of the Company, Duplicate Share Certificates will be issued, the originals of which will be deemed to have been cancelled.

**BY ORDER OF THE BOARD**
**SOFTLOGIC CORPORATE SERVICES (PRIVATE)LIMITED**
**SECRETARIES, 01 ST OF NOVEMBER 2024**

## ASIRI HOSPITAL HOLDIGS PLC -PQ 204
## LOSS OF SHARE CERTIFICATES

An application has been received by the Board of Directors of the above Company for the issue of the follwing Duplicate Share Certificate, the original of which is reported to have been lost or misplaced.

| Name | Share Certificate No | No.of shares |
|---|---|---|
| Mr.Sivasubramaniam Raveendra Mrs.Sivamalar Raveendra | 4293 | 4080 |

NOTICE IS HEREBY GIVEN that if within 14 days here of no claims are made to or no objections are lodged with the Directors of the Company, Duplicate Share Certificates will be issued, the originals of which will be deemed to have been cancelled.

**BY ORDER OF THE BOARD**
**SOFTLOGIC CORPORATE SERVICES (PRIVATE)LIMITED**
**SECRETARIES, 01 ST OF NOVEMBER 2024** (688)


## நல்லூர் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம்

நல்லூர் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரைபு வரவு செலவுத்திட்டம் "1987 ஆம் ஆண்டு பிரதேசசபைகள் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய" தயாரிக்கப்பட்டு 17.12.2024 தொடக்கம் 24.12.2024 ஆம் திகதி வரை எமது தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள், பொது நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் இதனை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

17.12.2024 யு.ஜெலீபன், செயலாளர், நல்லூர் பிரதேசசபை. (சி-1855)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**சிவ யோகர்சுவாமி நினைவுப்பேருரை - 2024**

**பேருரைத் தலைப்பு :**
**"சமய, சமூக, தத்துவ நோக்கில் சிவ யோகர்சுவாமிகளின் ஆன்மீகத்தளம்"**

**பேருரை வழங்குனர்:**
**வைத்தியக் கலாநிதி.இ.லம்போதரன்.**
**பணிப்பாளர்,**
**சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு.**
**நிறுவுனர், சைவசித்தாந்த பீடம், கனடா.**

**திகதி :** 19.12.2024 (வியாழக்கிழமை)
பி.ப 3.00 மணி
**நிகழ்விடம் :** கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-1813)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993 - இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L, வியாபாரம்<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15013 | பிறப்பு-1991 - இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 37<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு : Doctor, Engineer, Lecturer, Lawyer<br>தொ.இ: G/15014 |
| பிறப்பு: 1992 - இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L, கமம்.<br>எதிர்பார்ப்பு - தகுதியான பெண்<br>தொ.இ: B/15016 | பிறப்பு -1992 - இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு :Doctor, Engineer, Lecturer, Lawyer<br>தொ.இ: G/15015 |
| பிறப்பு:1983 - இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கிபா- 32<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: O/L, சொந்த மில், ஆட்டோ சேவை.<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15017 | பிறப்பு - 2000 - இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா- 21<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: University Final Year Student.<br>எதிர்பார்ப்பு - Doctor, Engineer, Lecturer, Bank Officers,Teachers.<br>தொ.இ: G/15018 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# பிரபல தபேலா இசைக்கலைஞர் ஜாகிர் உசைன் காலமானார்



(டில்லி)

பிரபல தபேலா இசைக் கலைஞர் ஜாகிர் உசைன் காலமானார்.

மும்பையைச் சேர்ந்த இவர் பல்வேறு திரைப்படங்களில் தபேலா இசை அமைத்துள்ளார். மேலும் இசைக் கச்சேரிகளிலும் பங்கேற்று பிரபலமடைந்தவர் ஆவார். நெஞ்சுவலி காரணமாகக் கடந்த சில நாட்களாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜாகிர் உசைன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உலகப்புகழ் பெற்ற ஜாகிர் உசைன் நான்கு முறை கிராமி விருதுகளை வென்றுள்ளார். இவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் உள்ளிட்ட விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது.

இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த ஜாகிர் உசைனுக்கு திரையுலகத்தினர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (நி-8)

# தென்கொரிய ஜனாதிபதியின் பதவிநீக்கம்; விசாரணையை ஆரம்பித்த நீதிமன்றம்



(சியோல்)

இராணுவச் சட்டத்தை விதிக்கும் முயற்சியில் தோல்வியடைந்ததற்காக பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலின் பதவி நீக்கம் தொடர்பான விசாரணையை தென் கொரியாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் நேற்று திங்களன்று தொடங்கியது.

தென் கொரியாவின் பாராளுமன்றத்தால் யூன் சிவிலியன் ஆட்சியை இடைநிறுத்துவதற்கான அவரது குறுகிய கால முயற்சியால் நீக்கப்பட்டார். இது நாட்டை பல ஆண்டுகளில் மிக மோசமான அரசியல் கொந்தளிப்புக்குள் தள்ளியது.

பதவி நீக்கத்தை உறுதி செய்ய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு சுமார் ஆறு மாதங்கள்கால அவகாசம் உள்ளன.

அவர் பதவி நீக்கப்பட்டால் இரண்டு மாதங்களுக்குள் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில் யூன் சுக் யோலின் பதவி நீக்கம் தொடர்பான நடவடிக்கைகளை தென் கொரியாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு முறைப்படி ஆரம்பித்துள்ளது.

யூனுக்குப் பதிலாக பிரதமர் ஹான் டக்-சூ தென் கொரியாவின் இடைக்காலத் தலைவராக பணியாற்று கிறார். விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யூன் பயணத் தடையினை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மயோட்டோவை

# 'சிடோ' சூ

- இதுவரை 11 பேர் உயிரிழப்பு: மேலும் அதிகரிக்கும் எ
- சுமார் 1000 பேர் வரை காயம்
- மீட்புப் பணிகள் தீவிரம்

(கேப்டவுன்)

பிரான்ஸ் நாட்டின் மயோட்டோ பகுதியில் வீசிய 'சிடோ' சூறாவளியால் 11 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரக்கணக்கானோர் காயம் அடைந்துள்ளனர்





ஐரோப்பிய நாடான பிரான்ஸில் நேற்று முன்தினம் பயங்கர சூறாவளிக் காற்று வீசியது. மணிக்கு 225 கி.மீ., வேகத்தில் வீசிய இந்தச் சூறாவளி இந்தியப் பெருங்கடலில்

# கருங்கடலில் பிளவடைந்த எண்ணெய்

# ரஷ்யாவிற்கு போ



(மொஸ்கோ)

ரஷ்யாவின் இரண்டு எண்ணெய்க்கப்பல்கள் கருங்கடலில் விபத்துக்குள்ளாகி பிளவடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பிளவடைந்துள்ள கப்பல்களில் இருந்து கசிந்த எண்ணெய் கடலில் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடும் புயலுக்கு மத்தியில் முதலாவது கப்பல் பிளவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு கப்பல்களிலும் சேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ புரட்டிப்போட்ட

# சூறாவளி!

ம் என அச்சம்

ீசிய
டன்
னர்.





உள்ள மயோட்டோ தீவைக் கடுமையாகத் தாக்கியது.

'சிடோ' என பெயரிடப்பட்ட இந்த சூறாவளி பலத்த சேதத்தை ஏற்படுத்தியதுடன் ஏராளமானோர் கடுமையாகப் பாதிப்படைந்தனர்.

சூறாவளி தாக்கியதில் ஏராளமான மரங்கள், மின் கம்பங்கள் சாய்ந்தன. மின் சாரம் துண்டிக்கப்பட்டது.

காயம் அடைந்தவர்கள் மயோட்டோவில் உள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒன்பது பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

பிரான்ஸ் மற்றும் அருகிலுள்ள ரீயூனியன் பிரதேசத்திலிருந்து 110 மீட்புப் பணியாளர்கள், தீயணைப்பு வீரர்கள் மயோட்டோவில் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இராணுவ விமானங்கள் மற்றும் கப்பல்கள் வாயிலாக பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்தத் தீவு மயோட்டோ தீவு பிரான்ஸின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சுமார் 3 லட்சத்து 20 ஆயிரம் பேரை மக்கள் தொகையாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ய்க் கப்பல்கள்

# ரிழப்பு

த்து 29 பணியாளர்கள் இருந்துள்ளனர். இதில் பணியாளர் ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டாவது கப்பல் சேதமடைந்த நிலையிலும் அவ்விடத்தை விட்டு நகர்ந்துள்ளதாகவும் அது கரையொதுங்கி இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

2014 இல் மொஸ்கோவால் சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட உக்ரைனிய தீபகற்பமான கிரிமியாவிலிருந்து ரஷ் யாவை பிரிக்கும் கெர்ச் ஜலசந்தியில் இந்த




சம்பவம் நடந்தது.

ஜனாதிபதி விளாடிமிர் புடின், துணைப் பிரதமர் விட்டலி சவேலி யேவ் தலைமையில் இந்த சம்பவத்தை விசாரிக்க ஒரு குழுவை அமைக்க உத்தரவிட்டுள்ளார். மேலும் அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் ரஷ்யாவின் அவசர சேவையானது இழுவைப் படகுகள் மற்றும் மில் எம்ஐ-8 உலங்கு வானூர்திகளை உள்ளடக்கிய 50 பேர்கொண்ட குழு மீட்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. (நி-8)

## பிரான்ஸின் கோர்ஷிகா தீவுக்கு

# போப் விஜயம்



(பாரிஸ்)

போப் பிரான்சிஸ் தனது 88 ஆவது பிறந்தநாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக பிரான்சின் கோர்ஷிகா தீவிற்குப் பயணம் செய்தார்.

நேற்று முன்தினம் ஒரு நாள் பயணமாக பிரான்ஸ் தீவான கோர்ஷிகா சென்றடைந்த போப் பிரான்சிஸ், அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை சந்திக்கவுள்ளார்.

மத்திய தரைக்கடல் அமைந்துள்ள கோர்ஷிகா தீவு பெரும்பான்மையான கத்தோலிக்க மக்கள் வாழும் பகுதியாக உள்ளது. இத் தீவுக்கு பயணம் செய்யும் முதல் போப் இவரே ஆவார்.

இத்தீவானது பிரான்ஸை விட இத்தாலிய நிலப்பரப்புக்கு அருகில் அமைந்துள்ளது.

1768 ஆம் ஆண்டில் ஜெனோவா பிரான்ஸிற்கு வழங்கிய தீவு இதுவாகும். (நி-8)

## சிரியாவை சரமாரியாக

# தாக்கிய இஸ்ரேல்



(ஜெருசலேம்)

சிரியாவில் ஒரு நாளில் 61 ஏவுகணைத் தாக்குதல்களை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்காரணமாக, சிரியாவின் தென்கிழக்குப் பகுதியில் மின் இணைப்புகள் மற்றும் தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் வெளியேற்றத்துக்கு பின் சிரியா மீது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல் அந்நாட்டு 80 சதவீத இராணுவ நிலைகளை அழித்ததாக தகவல் வெளியாகியது.


அந்த நாட்டில் உள்ள அபாயகரமான ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கையில் போவதைத் தடுக்கும் வகையில் கடந்த 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் 400இற்கும் மேற்பட்ட தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளது. இதை இஸ்ரேலிய இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில், சிரியாவின் இராணுவத் தளபாடங்கள், முக்கிய கட்டடங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, சிரியா நாட்டில் 80 சதவீத இராணுவப் பொருட்கள் இந்த தாக்குதலில் அழிந்ததாகத் தகவல் வெளியாகின. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலத்தில் முட்டை விலையில் மாற்றம்



(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்திற்காக முட்டையொன்றை சில்லறை விலையில் 30 முதல் 35 ரூபாவிற்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சராசரியாக 50 கிராமுக்கு குறைவான எடையுள்ள முட்டையை 30 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கலாம் என அந்த சங்கத்தின் தலைவர் என்டன் அப்புஹாமி தெரிவித்தார்.

55 கிராமுக்கு மேல் உள்ள பெரிய முட்டையை 33 ரூபாய் முதல் 35 ரூபாய் வரையில் வாங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தையில் பெரும்பாலும் இந்த விலைக்கே முட்டைகள் கிடைப்பதாகவும் முட்டைகளை இந்த விலைக்கு மேல் வாங்க வேண்டாம் எனவும் நுகர்வோர்களை அவர் கேட்டுக் கொண்டார். (நி-8)

# கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் 1 கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 900 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை உள்ளது.

இருப்பினும் எதிர்வரும் நாட்களில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 600 | 700 | 600-800 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 280 | 280 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 1000-1300 | 900 |
| தக்காளி | 450 | 500 | 300 | 250-300 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 240 | 150-180 | 200 |
| கோவா | 350 | 350 | 250 | 260 | 400 |
| கரட் | 280 | 280 | 250 | 250 | 300 |
| பூசணி | 140 | 180 | 200 | 150 | 250 |
| புடோல் | 350 | 380 | 300 | 250 | 400 |
| வாழைக்காய் | 150 | 160 | 100 | 80-100 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 180-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 300 | 250 | 350 | 300 |
| பாகற்காய் | 1500 | 2000 | 1000 | 2000 | 2400 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 | 130 | 200 |
| பயற்றங்காய் | 800 | 650 | 600 | 600-800 | 600 |
| லீக்ஸ் | 450 | 480 | 300 | 300 | 500 |
| பீற்றூட் | 350 | 400 | 200 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 800 | 600-700 | 800 |
| முருங்கைக்காய் | -- | 800 | 1000 | -- | 2000 |
| போஞ்சி | 650 | 400 | 500 | 550 | 400 |
| கத்தரிதம்புள்ள | 700 | 500 | 350 | -- | 550 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 150 | 180-200 | 200 |
| தேசிக்காய் | 600 | 500 | 500 | 400-550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-170 | 160-200 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 750 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 850 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 280 | 250 | 300 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 60 | 100 | 100 | 100 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 285



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## இறை நேசர்

பதினாறாம் நூற்றாண்டிலே ஒரு புகழ் பெற்ற இறைநேசச் செல்வர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் அப்துல்லா ஹிஸ் ஸவ்மயி (ரஹ்). இப்போது சோவியத் ரஷ்யாவிலே உள்ள ஜீலான் என்கின்ற நகரத்தினுடைய புறநகர் பகுதியிலே நீப் என்று ஒரு ஊர். அங்கேதான் அவர் இருந்தார். அவருக்கு ஒரு அப்பிள் தோட்டம் இருந்தது. தஜ்லா நதி ஓரத்திலே. அந்தத் தோட்டத் திலே அவர் ஒரு நாள் உலாவிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே இருபது வயதான அழகான ஒரு இளைஞன் ஒருவன் அவர் முன்னால் வந்து நின்றான். என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் என்றான். இவருக்கு ஒன்றும் புரியவில்லை. யாரப்பா நீ? நீ என்ன கெடுதல் செய்தாய்? நான் எதற்காக உன்னை மன்னிக்க வேண்டும்? என்று கேட்டார்.

ஐயா என் பெயர் அபுஸாலிஹ் மூஸா. இங்கிருந்து நான்கு கல் தொலை விலே தஜ்லா நதி ஓரத்திலே தான் நான் இருக்கின்றேன். நேற்று மதியம் எனக்கு நல்ல பசி. அந்த நேரத்திலே ஒரு அப்பிள் பழம் நதியிலே மிதந்து வந்தது. அவசரத்திலே அதை எடுத்து சாப்பிட்டு விட்டேன்.

சாப்பிட்டதன் பின் தான் அவ்வாறு சாப்பிட்டது பிழை என்று உணர்ந்தேன். ஒரு பொருளுக்கு உரியவர் யாரோ அவர் அனுமதியில்லாமல் அந்தப் பொருளை உண்பது ஹராம் ஆகும். ஹராம் ஆன அந்தப்பழம் என் வயிற்றுக்குள்ளே போனதிலிருந்து எனக்கு நிம்மதியில்லை. இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. காலை எழுந்ததும் இந்த நதிக்கரை ஓரமாகப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

உங்கள் தோட்டத்தைப் பார்த்தேன். அதனாலே நான் சாப்பிட்ட பழம் இங்கேயிருந்து தான் வந்திருக்க வேண்டும். அந்தப் பழத்திற்கு உரியவர்கள் நீங்கள் தான். நீங்கள் என்னை மன்னித்தால் தான் நான் உண்ட பழம் ஹலால் ஆகும். குற்றம் நிவர்த்தியாகும். தயவு செய்து மன்னிக்க வேண்டும் என்று கண்கலங்கக் கேட்டுக் கொண்டான்.

அதைக் கேட்ட ஸவ்மயி ஆச்சரியத்தோடு அவனைக் கூர்ந்து கவனித்தார். இந்த அளவு நேர்மையான ஒரு மனிதனை விட்டுவிடக் கூடாது என்று மனதிற்குள்ளே முடிவு செய்தார். நிமிர்ந்து அந்த இளைஞனைப் பார்த்தார். இதற்கு நீ தண்டனையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார் என்றான். இதற்கு தண்டனையாக 12 வருட காலங்கள் நீ இங்கே பணிவிடை செய்ய வேண்டும் என்றார். பணிவிடை செய்வதைப் பாக்கியமாக நினைக்கின்றேன் என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு அந்தத் தண்டனையை ஏற்றுக் கொண்டான்.

12 வருடங்கள் முடிந்தது. அந்த 12 வருட காலத்திலே அந்த இளைஞனுடைய வயதும் தகுதியும் வளர்ந்தது. கடைசியிலே அந்தப் பெரியவர் அந்த இளைஞனைக் கூப்பிட்டார். இதோ பாருப்பா! இன்றுடன் உன் பணிவிடைக் காலமான 12 வருடங்கள் முடிந்துவிட்டது. ஆனால் தண்டனை இதோடு முடிந்து விட்டதாக நினைத்து விடாதே. அது இன்னும் முடியவில்லை. கடைசியாக இன்னுமொரு தண்டனை மீதம் இருக்கின்றது. அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். எதுவாகிருந்தாலும் ஏற்றுக் கொள்வதற்கு சித்தமாக இருக்கின்றேன் என்றான் இறைநேசச் செல்வன்.

எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு இரண்டு கண்ணும் தெரியாது. இரண்டு காதும் கேட்காது. இரண்டு காலும் செயற்படாது. அவளை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றார். இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் திகைத்துப் போய் விட்டார். அடுத்த நிமிடம் சரி இதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றேன் என்றார். இறை நேசச்செல்வர் ஸவ்மயியின் புதல்வி பாத்திமாவிற்கு இளைஞன் அபுஸாலிஹ் மூஸாவிற்கும் அடுத்த சில தினங்களில் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பின் மணமகளைப் பார்த்த அந்த இளைஞன் திகைத்துப் போய்விட்டான். ஏன் என்றால் அந்தப் பெரியவர் சொன்னதற்கு நேர் எதிர்மாறாக இருந்தார் பாத்திமா. உடல் ஊனம் எதுவும் இல்லை. மிகவும் அழகாக இருந்தார். மறுநாள் ஸவ்மாயி அபுஸாலிஸைக் கூப்பிட்டு இதற்கு விளக்கம் சொன்னார். என் மகளுக்கு கண்கள் தெரியாது என்று சொன்னேன். எந்த வித தீய காட்சிகளும் அவள் கண்களுக்கு தெரியாது என்று அர்த்தம். காது கேட்காது என்று சொன்னேன்.

தீய விடயங்களை அவள் கேட்க மாட்டாள் என்று அர்த்தம். கால்கள் செயல்படாது என்று சொன்னேன். வீட்டை விட்டு தீய்மையான இடங்களுக்கு அவள் செல்ல மாட்டாள் என்று அர்த்தம் என்றார்.

12 வருடங்களுக்கு முன்னர் உன்னை முதன் முறையாகப் பார்த்த போதே உன்னை என் சீராக மானசீகமாக ஏற்றுக் கொண்டேன் என்ற விளக்கத்தைச் சொன்னார். இந்த இளைஞன் அபுசாலின் பிற்காலத்திலே ஒரு பெரிய ஆன்மிக மேதையாக உயர்ந்தார். அந்தத் தம்பதிகளுக்கு 60 வயதிலே ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை தான். ஆன்மிக பேரரசர் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஆண்டகை. இறைநேசச் செல்வர்களுடைய வாழ்க்கை தான் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நாங்கள் எல்லாம் அப்படியா இருக்கின்றோம்.

எனக்கு ஒரு சிநேகிதன். அவன் சொன்னான். டேய் என்னுடைய மாமனார் கூட தன்னுடைய பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்னால் ஒரு செய்தி சொன்னார். அது பொய் என்று அதன்பின் தான் புரிந்தது என்றார். என்ன சொன்னார் என்று கேட்டேன். என் மகள் மாதத்திற்கு ஒரு தடவை ஏதாவது கோபம் வந்து கையிலே கிடைப்பதை எடுத்து உங்கள் மீது வீசினால் நீங்கள் தான் அனுசரித்துச் செல்ல வேண்டும் என்றார். அப்படி அவர் சொன்னது பொய்யா என்று கேட்டேன். ஆமாம் மாதம் ஒரு தடவை என்று அவர் சொன்னது பொய். தினம் ஒரு தடவை அப்படிச் செய்கின்றாள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஏ-9 வீதியில் விபத்து- இருவர் படுகாயம்

(தருமபுரம்)

கிளிநொச்சி ஏ-9 வீதியில், மத்திய ஆரம்ப வித்தியாலயம் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி டிப்போ சந்நிதியிலிருந்து தலைக்கவசம் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் ஏ-9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும் இரணைமடு பகுதியில் இருந்து வந்த டிப்பர் வாகனமும் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இவ் விபத்தில் படுகாயம் அடைந்த இருவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப்பிரிவிலும் மற்றைய நபர் சாதாரண சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-316)


# அறுவடைக்கு தயாராக இருந்த பப்பாசிப் பயிர்ச்செய்கை பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட 21கிராம அலுவலர் பிரிவில் கன மழை காரணமாக பப்பாசிப் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக பப்பாசிச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே 500 செய்கையாளர்களுடைய பப்பாசிகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் பாதிக்கப்பட்ட சில விவசாயிகள் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டதற்கு அமைவாக நயினாமடு,



மதியாமடு, சன்னாசிபரந்தன் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிப் பயிர்ச் செய்கைகளைப் பார்வையிட்டதுடன், செய்கையாளர்களிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் உரிய தரப்பினருடன் பேசி பாதிக்கப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையாளர்களுக்குரிய நட்டஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (6-8-250)



# எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே சோழியபுரம் பத்ம வெளியீடு

**இந்திய சீன வல்லாதிக்க மோதலுக்குள் நான் சிக்கிக் கொள்ளேன். ஜனாதிபதி தோழர் அநுரவின் கூற்றும்... இந்திய விஜயமும்**

**என் அன்பு உள்ளங்களே!**

தோழர் அநுர ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் சர்வதேச ஊடகமொன்றிற்கு கருததுத் தெரிவிக்கும் போது இந்தியா- சீனா இடையிலான புவிசார் அரசியல் மோதலில் நாங்கள் சம நிலையிலான உறவைப் பேணுதல் என்னும் வெளிவிவகாரக் கொள்கையையே கடைப்பிடிப்போம் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்த ஒரு ஜனாதிபதியும் இவ்வாறு மனத்தைரியத்துடனும் துணிச்சலுடனும் கூறியது கிடையாது.

ஆகவே தோழர் அநுரவின் அரசியல் துணிச்சலை நாம் பாராட்டாமல் இருக்கவும் முடியாது.

எனவே தோழர் ஜனாதிபதி அநுர தலைமையிலான குழுவினரின் இந்திய விஜயம் நம் நாட்டு அரசியல், பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கும் நாட்டின் சுபீட்சத்துக்கும் வழி சமைத்திட சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம்- பறாளாய் ஈசுர விநாயகனின் இறையருள் கிடைப்பதாக...

15.12.2024 சோழியூரான்..

**இந்தியா- சீனா இடையே புவிசார் அரசியலில் சிக்கிக்கொள்ள மாட்டேன் என்ற ஜனாதிபதியின் கூற்று...**

மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கொள்கையே அரசியலாகும். மனித வாழ்க்கையை கடலுக்கு ஒப்பிடுவார்கள். அதே போன்று அரசியலையும் கடலுக்கு ஒப்பிடுவார்கள் ஆன்மிகப் பெரியோர்கள்.

இந்தியா- சீனா இடையே புவிசார் அரசியலில் சிக்கிக் கொள்ள மாட்டேன் என்ற ஜனாதிபதியின் கூற்று- என்னை ஆழமாக சிந்திக்க வைத்துள்ளது.

காரணம் அடியேன் நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக ஆன்மீகப் போராட்டத்தை நடாத்தும் ஒரு ஆன்மீகவாதி.

எனவே ஜனாதிபதி அவர்களின் கூற்றை எனது ஆன்மீகப் போராட்டத்தில் தேடினேன் ஒரு பெறுபேறு கிடைத்தது. அதனை என் அன்பு உள்ளங்களுக்கு அறியத் தருகின்றேன். விளங்கிக் கொள்ளுங்கள் திருநாவுக்கரச நாயனார் பாடிய தேவாரமே அது. இது மனித வாழ்க்கையையும் அதன் பயனையும் குறிப்பதாகும்.

**தேவாரம்**

**மனமெனும் தோணி பற்றி மதியெனும்**
**- கோலை ஊன்றி**
**சினமெனும் சரக்கை யேற்றிச் செறி கடல்**
**- ஓடும் போது**
**மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது**
**- அறிய வொண்ணாது**
**உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர்**
**- உடைய கோவே.**

**எனது ஆன்மீகப் போராட்டப் பாதையிலே பொழிப்புரை.**

இங்கே ஜனாதிபதி அவர்களின் மனத்துணிவு ஆளுமையுடன் உருவான மனம் என்னும் தோணியை மக்கள் கொடுத்த வரமாகிய செங்கோலை துடுப்பாகப் பாவித்துக் கொண்டு கடல் என்று சொல்லப்படும் அரசியலை நடாத்தும் போது அத்தோணியிலே போதாமைக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சீனப் போர்க்கப்பல் ஆராச்சிக் கப்பல் போன்ற இந்தியாவை சினம் கொள்ள வைத்த சரக்கு வகைகளையும் ஏற்றிக் கொண்டு வலிமை பொருந்திய திரைகளை அடிக்கின்ற இந்து மா கடலில் கண்காணிப்புக்கு மத்தியில் தங்களின் தேசிய அரசியல் தோணி பயணிக்கும் போது பிராந்திய அரசியல் என்று சொல்லப்படுகின்ற புவிசார் அரசியலில் சிக்கிக் கொள்ளாது காக்க சுழிபுரம்- பறாளாய் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரே அருள் புரிவாராக

**"மனித சக்தியை ஆட்டிப்படைப்பது தெய்வீக சக்தி"**
**"மனித சக்திக்கு அப்பாற்பட்டது தெய்வீக சக்தி"**
**என்பதை உணர்வோமாக.**


(2771)

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும், ஓய்வு நிலை ஆசிரியரும்)**

# வண்ணை வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரன் ஆலயமுன்றலில்-திருவாசகம் இன்று காலை-6.30 முத்திநெறியில் முன்னேறவும், ஈழத்துச்சிதம்பரம் கும்பாபிஷேகம் காணவும் பிறவியிலிருந்து நம்மை மீட்போம்

மாணிக்கவாசகர் வாழ்த்து போற்றுவோம் வாணங்குவோம்

முத்திநன் முதற்பொருளாகு முன்வைர்
கொத்தவர் குருநட்தினிற் குருவின் ரூபமாய்
வைத் தெதிர் தன்வயமார்க்கும் வாதவூர்
அத்தர் தொழுவளத் தவல மாற்றுவோம்
*திருப்பெருந்துறை - புராணம்*




திருவாசகம் திருவருட் பேற்றினைத் தரவல்ல செந்தமிழ் சிவஞான நூலாகும். ஓர் சிறந்த அருட்செல்வமாகும். ஓதுவோர் வறுமைத் துன்பம், செல்வச்செருக்கு; ஆணவம் ஆகிய உடம்பு உயிருக்கு வீடு; உயிருக்கு வீடு முக்தி: இந்த உடலாகிய வீட்டை விட்டு இறைவனோடு தங்குவது முக்தியாகிய வீடு ஆக விளங்கும் பொருந்த தயார் ஓம் நமச்சிவாய .


வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மற்றும் பரிவாரத்திருக்கோவில்கள் ஒரு சில மாதங்களில் புணருத்தானம் நிறைவேறி மஹாகும்பாபிஷேகம் நிறைவேறியது நம் பிறவிப் பிணியை நீக்கும் வாலாம்பிக சமேத வைத்தீஸ்வரன் அருளாகும். பரம்பரை தர்மகர்த்தாவும் ஆலய பிரதம குரு அவர்களது முயற்சி வருதும்.

(சி-1814)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மஹாகும்பாபிஷேகம் நிறைவாக முன்னோர்கள் வழிகாட்டலில் பூமியிற் பிறந்த மக்கள் அடையும் மாட்சிமைப்பட்ட ஆண்டு முழுவதும் மக்கள் உரிய புண்ணிய பயனைத் தருகின்ற திருவிழாக்களை காண்போம். எம்பெருமானது திருவடிகளைத் தொழுது உலக நாடு பூராகவும் திருவாசகம் ஓதுவோம்.

அடுத்த திருவாசக முற்றோதல்.28.12.2024.

**க.கு.க. சிவபாலன்**
**மாணிக்கவாசகர் மடாலயம்,**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 658





மேலே மழை, கீழே சறுக்கும் சேற்றுத் தரை. ஒரு பக்கத்தில் வாய்க்கால். இன்னொரு பக்கத்தில் நெல் வயல்கள் சுற்றிலும் முட்புதர்கள். குதிரை மெல்ல மெல்லச் சென்றது. நேரமோ, ஒரு நிமிடம் ஒரு யுகமாகச் சென்றது! தூறல் மழையாக வலுத்துக் கொண்டிருந்தது! இருட்டு மேலும் இருண்டு கொண்டிருந்தது! வந்தியத்தேவனுடைய உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது!

மதுராந்தகத் தேவர் தனியாகக் குதிரைமீது ஏன் வந்தார்? எங்கே செல்வதற்காகப் புறப்பட்டு வந்தார்? அவரை எதிர்கொண்டு வந்த மனிதன் யார்? வானதியைச் சிலர் பிடித்துக் கொண்டு சென்றதற்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? வானதியின் கதி இப்போது என்ன ஆகியிருக்கும்? நாம் எதற்காக இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு விழிக்க வேண்டும்? நம்முடைய காரியத்தை நாம் பார்க்கலாமே? இராஜபாட்டையைத் தேடிப் பிடித்து அடைந்து காஞ்சியை நோக்கிப் போகலாமே! அதுதான் இந்த மழைக்கால இருட்டில் எப்படிச் சாத்தியமாகும்? இந்தக் காரியங்கள் எல்லாம் நமக்குச் சம்பந்தம் இல்லையென்று எப்படித் தீர்மானிக்க முடியும்?

கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் நமக்குச் சம்பந்தமில்லாத காரியத்தைக் கவனித்ததினால் பிற்பாடு எவ்வளவு உபயோகம் ஏற்பட்டது? ஆனாலும் இன்றிரவு இந்த இருட்டில் இந்த வாய்க்காலின் கரையோடு போய்க் கொண்டிருப்பதினால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. சொட்ட நனைவது தான் பயன்! குதிரை எங்கேயாவது இடறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டால் பிரயாணமே தடைப்பட்டுவிடும்.

திரும்பிச் சென்று அந்தப் பாழும் மண்டபத்தை அடைய வேண்டியதுதான். மழைவிட்ட பிறகுதான் மறுபடியும் புறப்பட வேண்டும். பளிச்சென்று ஒரு மின்னல், அதன் நேர் வெளிச்சத்தில் சிறிது தூரத்தில் களத்து மேடு ஒன்றில் ஒரு குதிரை நின்றது போலத் தெரிந்தது. வந்ததுதான் வந்தோம் இன்னும் கொஞ்சதூரம் சென்று, அதையும் பார்த்துவிட்டுத் தான் போகலாமே! இளவரசர் மதுராந்தகருக்கு ஆபத்துச் சமயத்தில் கை கொடுத்து உதவினால் அதன் மூலம் பிற்பாடு எவ்வளவோ காரியங்களுக்குச் சாதகம் ஏற்படலாம்.

குதிரையை வாய்க்காலின் கரையிலிருந்து பக்கத்து வயல் வரப்பில் வந்தியத்தேவன் இறக்கினான். குதிரை நின்றதாகத் தோன்றிய களத்துமேட்டை நோக்கிச் செலுத்தினான். களத்து மேட்டின் சமீபத்தை அடைந்தபோது அது ஒரு பெரிய கரிய பூதத்தைப் போல் காட்சி அளித்தது. இன்னொரு மின்னல், மேட்டின்மீது குதிரை நின்றது ஒரு கணம் தெரிந்தது. குதிரையின் பேரில் ஆள் இல்லை என்பதை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான். இடி இடித்தது! இடிக்கும் மின்னலுக்கும் பயந்துதானோ என்னவோ அந்தக் குதிரை மறுபடியும் தெரிகெட்டுப் பயந்து ஓடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து போவதில் இனி ஒரு பயனுமில்லை.

பக்கத்தில் எங்கேயாவது குதிரைமேலிருந்து விழுந்த மதுராந்தகத் தேவர் ஒரு வேளை இருக்கக்கூடும். ஆகையால் வந்தியத்தேவன் பலமுறை குரல் கொடுத்துப் பார்த்தான். "ஜிம் ஜிம்" "ரிம் ரிம்" என்னும் மழை இரைச்சலை மீறி அவனுடைய இடி முழக்கக் குரல். அங்கே யார்?" "அங்கே யார்?" என்று எழுந்தது. நாலா புறத்திலிருந்தும் "அங்கே யார்?" அங்கே யார்? என்ற எதிர் ஒலி தான் கேட்டது.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### மாங்காயும் கைக்கோலும்



ஒரு குருடன் தட்டித் தடவிக் கொண்டே ஒரு சாலை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தான். வெயில் கொடுமையாக எரித்துக் கொண்டிருந்தது. எங்காவது நிழல் கிடைக்குமா என்று தேடி அவன் சென்று கொண்டிருந்தான்.

ஒரிடத்திற்கு வந்ததும் குளிர்ந்த நிழல் தன் மீது படுவதை அவன் உணர்ந்தான். கைக்கோலினால் தட்டிப் பார்த்து அந்த இடத்திலே ஒரு மரம் இருப்பதை அறிந்து கொண்டான். அந்த மரத்தின் அடியிலே போய் உட்கார்ந்தான்.

சிறிது நேரம் சென்ற பின் தொப்பென்று ஏதோ விழுந்த ஓசை கேட்டது. ஒலி வந்த இடத்தை நோக்கி நகர்ந்தான். குருடன் தரையைக் கையால் தடவித் தடவி ஒரு காயைக் கண்டெடுத்தான். மூக்கின் அருகில் கொண்டு சென்றபோது அது ஒரு மாங்காய் என்று அறிந்து கொண்டான். அந்த மாங்காய் சிறிதும் புளிப்பில்லாமல் பச்சரிசி போல் சுவையாக இருந்தது.

குருடன் அதைக் கடித்துத் தின்றான். இன்னொரு மாங்காய் தின்ன வேண்டும் போல் இருந்தது. தலைக்கு மேலே மாங்காய்கள் காய்த்துத் தொங்குகின்றன. கைக்கோலை வீசி எறிந்தால் ஏதாவது விழும் என்ற எண்ணம் அந்தக் குருடனுக்கு ஏற்பட்டது.

தன் கைக்கோலை எடுத்தான். மேல் நோக்கி அதை வீசி எறிந்தான். கைக்கோல் சில்லென்ற ஓசையுடன் மேல் நோக்கிச் சென்றது. மரக்கிளைகளின் சிக்கிக் கொண்டது. மாங்காயும் விழவில்லை. கைக்கோலும் பறிபோயிற்று.

குருடன் என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் தயங்கிக் கொண்டிருந்தான். பிறகு குருட்டுத்தனமாகத் தான் செய்த செயலை எண்ணி நொந்துகொண்டே, கைக்கோல் இல்லாமலே அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டான். வழியில் பல தொல்லைகளை அனுபவித்துக் கொண்டு இருப்பிடத்தையடைந்தான்.

கருத்துரை:- குருட்டுத்தனமான நம்பிக்கையோடு எந்தச் செயலையும் செய்யக் கூடாது. அவ்வாறு செய்வதால் எண்ணியதும் நிறைவேறாமல் இருப்பதையும் இழக்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவின் முக்கியத்துவத்தை இனியேனும் புரிந்து கொள்ளுங்கள்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரச பயணமாக இந்தியாவுக்குச் சென்றுள்ளார். ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அநுர குமார திஸாநாயக்க மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியா என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றி பெற்றதும் அவரை முதலில் சந்தித்த வெளிநாட்டு இராஜதந்திரி இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா என்பதும் அந்தச் சந்திப்பின் போது இந்தியாவுக்கு வாருங்கள் என இந்தியத் தூதுவர் அழைப்பு விட்டதும் இங்கு கவனிக்கத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெறுவதை இந்தியா விரும்பவில்லை என்றும் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவதையே இந்தியா விரும்பியதென்றதுமான ஊகங்களும் உண்டு.

எதுவாயினும் தான் ஜனாதிபதியாக வருவதை இந்தியா விரும்பவில்லை என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிந்திருந்தாலும் அதனைப் பகைமையாக அவர் கருதவில்லை.

அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று; இந்தியா ஒரு வல்லரசு நாடாக உருவாகி வருகிறது.

அதேநேரம் இலங்கையின் அண்டை நாடாக இருக்கக்கூடிய இந்தியாவைப் பகைப்பது இலங்கைக்குப் பாதகமேயன்றி அது ஒருபோதும் இந்தியாவுக்குப் பாதகமாக அமையாது.

தவிர, இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதெல்லாம் இந்தியா தனது உதவிகளை இலங்கைக்குத் தாராளமாக வழங்கியது.

ஆக, ஜனாதிபதித் தேர்தலின்போது இந்தியா தன்னை எதிர்த்தது என்பதற்காக தனது வெளிநாட்டுப் பயணம்; சீனாவுக்கானது அல்லது அமெரிக்காவுக்கானது என்பதாக ஜனாதிபதி அநுர முடிவு செய்யவில்லை.

மாறாக, நடந்தது நடந்து முடிந்து விட்டது. அதை சதா நினைத்து எதிர்காலத்தை இழப்பது மடமைத்தனம் என்ற உண்மையை ஒரு நாட்டின் ஆட்சித் தலைவராக ஜனாதிபதி அநுர உணர்ந்திருந்தார்.

தவிர, இந்தியாவை எதிர்த்து உலக நாடுகளுடன் நட்புக் கொள்வதென்பது இலங்கைக்கு ஒருபோதும் சாதகமாக அமையாது என்பதையும் தெட்டத்தெளிவாக உணர்ந்திருந்த ஜனாதிபதி அநுர, தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவில் இருந்து தொடங்குகிறார்.

ஜனாதிபதி அநுரவின் விஜயம் – அவருக்கு இந்தியா வழங்கிய வரவேற்பு – இந்திய அமைச்சர்கள் மற்றும் பிரதமர் மோடியுடன் நடத்திய சந்திப்பு என்பன இலங்கை – இந்திய உறவை நிச்சயம் வலுப்படுத்தும்.

இங்குதான் தமிழர்களாகிய நாம் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆம், கடந்த காலங்களில் எங்கள் சுயநல அரசியலால் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் ஈனத்தைத் தேடிக்கொடுத்தோம்.

ஆக, இனிமேலாவது அதற்குக் கழுவாய் தேடுவதாக இந்தியாவுடன் நெருக்கமான உறவை வலுப்படுத்தி, எங்கள் இனப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண முயற்சி செய்வோம். அதுவே அறிவுடைமை.

## அமைச்சர் ஹர்ஷணவின் கல்வித் தகைமை தொடர்பில் பிழையான தரவுகள்

### குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, தனது கல்வித் தகைமை தொடர்பில் பிழையான தரவுகள் பாராளுமன்றத் தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர், "நான் ஒரு சட்டத்தரணி. 25 வருடங்கள் அத்துறையில் இருக்கின்றேன். எனவே, எனது பெயருக்கு முன்னால் நான் ஒருபோதும் கலாநிதிப் பட்டத்தைப் பயன்படுத்தியது கிடையாது.

எனது பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம் பயன்படுத்தப் பட்டமை தொடர்பில் பாராளுமன்றத் தகவல் திணைக்களம் மன்னிப்பு கோரியுள்ளது. எனினும் எனது பெயருக்குக்களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் தவறான தகவல் உள்ளடக்கப்பட்டதா? என்பது பற்றி விசாரிக்குமாறு கோரியே முறைப்பாடு செய்துள்ளேன் என்றார். (ம-7)

## ஜனாதிபதி அன்பளிப்பு சமூக ஊடகங்களில் பரவும் போலியான செய்திகள்

"ஜனாதிபதி அன்பளிப்பு " எனும் பெயரிலான தலைப்பில் அரசாங்கத்தின் உதவி வேலைத்திட்டம் தொடர்பில் போலிச் செய்தியொன்று தற்போது சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரவிவருவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு குறித்த செய்தியுடன் லிங்க் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இது தொடர்பில் விபரிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தி முற்றிலும் பொய்யானது எனவும் அரசாங்கம் இவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்பில் தீர்மானம் எடுத்திருந்தால், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்குக் குறித்த முடிவுகளை அரசாங்கம் தெரிவிப்பது செயன்முறையாக உள்ளது.

அரசாங்கத்தினால் அறிவித்தல் செய்யப்பட்ட அரச கொள்கை மற்றும் முடிவுகளை திரிபு படுத்தி இவ்வாறான பொய்யான செய்திகளைப் பிரசாரம் செய்ய வேண்டாம் என சமூக ஊடக செயற்பாட்டாளர்களிடம் கேட்டுக்கொள்வதாகவும் அடிப்படையற்ற பொய்யான செய்திகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பரிமாறிக் கொள்வதிலிருந்து பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளுமாறும் அரசாங்கத் தகவல் திணைக்களம் கோரியுள்ளது. (ம-7)

## மின்சார வேலியில் சிக்கிய இளைஞன் பலி

(குருநாகல்)

குருநாகல் - மெல்சிறிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தித்தெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் குருநாகல், மெல்சிறிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் ஆவார்.

இந்த இளைஞன் மெல்சிறிபுர - தித்தெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெல்சிறிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மது அருந்திவிட்டு பேருந்தை செலுத்திய சாரதி பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மது அருந்திய நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தை ஓட்டிச் சென்ற சாரதி ஒருவர் தெல்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மது போதையில் பயணிகளை ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக இந்தச் சாரதி மீது வழக்குத் தொடர பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சாரதி இதற்கு முன்பும் இதே தவறைச் செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மத்திய பிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடமை நேரத்தில் மது போதையில் இருந்தமை, வீதி ஒழுங்குகளை மீறியமை தொடர்பாக சாரதி மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## வவுனியாவில் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளானவர்

### யாழ். போதனாவுக்கு மாற்றம்

வவுனியாவில் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா, தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவருக்கு காய்ச்சல் குணமடையாததால் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு எலிக்காய்ச்சல் தொற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதுடன், அவருக்கு அங்கு மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (ம-7,250)

## மயக்கமருந்து கொடுத்து முச்சக்கரவண்டி திருட்டு

### வவுனியாவில் சம்பவம்; ஒருவர் கைது

வவுனியாவில் மயக்க மருந்து கொடுத்து முச்சக்கர வண்டிகளை திருடி விற்பனை செய்த நிலையில் இரு முச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, முச்சக்கர வண்டி சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே விழுத்தி விட்டு, குறித்த முச்சக்கர வண்டியை கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

அதுபோன்று, வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் இருந்து உளுக்குளம் நோக்கி முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திச் சென்று, சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து முச்சக்கர வண்டி ஒன்று கடத்திச் செல்லப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல்-2025, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01. | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2025ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2025ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2025ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து மேலதிக கட்டணம் அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2025ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்/ பிற சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழுங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1.எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்த வேலை செய்வதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2.புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழை நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்<br>3.புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.<br>4.கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபையின் அந்தந்த உப அலுவலகங்களுக்கு கட்டிடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>5.பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>6.அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானிப்பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடு செய்யப்படும். |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமை யாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2022ஆம் ஆண்டு தை மாதம் 27ஆம் திகதி 2264/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "ஈ"பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 06 | வியாபார அனுமதிப் பத்திரம் | பிரதேசசபை எல்லை க்குட்பட்ட சகல வியா பாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப் படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2025ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2025.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரியகட்டணங்களைச் செலுத்தி 2025ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 08 | மிருகங்களுக் கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2025.03.31ஆம் திகதிக்கு முன் சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி பதிவு செய்து 2025 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டண விபரம் பின்வருமாறு |

| இல | | நிரல் I விபரங்கள் | நிரல் II அறவிடப்படும் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | இலத்திரனியல் விளம்பர பலகைகள் | ஒருசதுர அடிக்கு | 260.00 |
| 2. | இலத்திரனியலற்ற விளம்பரப் பலகை | ஒருசதுர அடிக்கு | 160.00 |
| 3. | பெயர்ப் பலகைகள் | ஒருசதுர அடிக்கு | 60.00 |
| 4. | நிலைச்சட்டங்கள் | ஒருசதுர அடிக்கு | 110.00 |
| 5. | விசேட நாட்களில் காட்சிப்படுத்தும் விளம்பரங்கள் | - | 60.00 |
| 6. | நாள் ஒன்றுக்கு விளம்பர சேவை | நடமாடும் விளம்பர சேவை | 3.000.00 |

| | | | |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத் தருகின்றேன். மேலும் சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள்,மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது . சுகாதாரத்திற்கு ஒவ்வாத அனுமதியற்ற நடமாடும் சுண்டல்,சோளம் மற்றும் தீன்பண்ட விற்பனை தடை செய்யப்படுகின்றது. (விசேட சந்தர்ப்பங்களில்உரிய அனுமதிபெறப்படல்வேண்டும்) |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவுகையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொது இடங்க ளில் கழிவு போடுதலும் டெங்குநுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாகத் தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன், மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதி நடைமுறைகளுக்கமைவாகவும் வலி தெற்கு பிரதேச சபையில் 2025ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2025ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக்கொள்ளவும். கல்வித் தகைமை Drafting Technology Civil NVQ Level - 5 இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். |
| 14 | தரகர் முறை நீக்கல் கழிவு நடைமுறைக்கு தடை | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். அத்துடன் நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவு முறை முற்றாக தடை செய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது. |
| 15 | இரசாயன மருந்து விசிறிய பழங்கள் | வியாபாரிகள் | அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 16 | கழிவுநீர் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக்கழிவுநீர், வியாபார கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானது என உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 17 | பொதுப்போக்குவரத்துக்கு இடையூறாகவும் டெங்கு பரவலுக்கு ஏற்ற வகை யில் பெரும் கட்டுமான பொருட்களை வைத்தல். | பிரதேச சபை எல் லைக்குட்பட்ட பொதுமக்கள் மற் றும் அரச தனி யார் நிறுவனங்கள் | பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்தல். உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்காவி பரவும் ஆபத்தான நிலைமைகளைப் பேணுதல் தவிர்க்கப்படல் வேண்டும். |
| 18 | நடைபாதை வியாபாரிகள் | வீதி ஓரங்களில் தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 1998.08.23ஆம் திகதிய 520/7ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் "பகுதி IV (ஆ)" உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் படி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட இடங்களில் மட்டும் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பொது இடங்களில் விற்பனை செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>01.இணுவில் பொதுச்சந்தைப்பகுதி<br>02.மருதனார்மடம் பொதுச்சந்தைப்பகுதி<br>03.சுன்னாகம் பொதுச்சந்தைப்பகுதி |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. சாரதா உருத்திரசம்பவன், செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். 021 224 0017 / 021 205 3001**

(சி-1811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலும்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில், எதிர்வரும் 22 ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரியவருகின்றது.

ஒரு வாரகாலம் இந்தியாவில் தங்கியிருந்து முக்கிய சந்திப்புக்களில் அவர் ஈடுபடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. (ம-7)

## பேருந்து...

உயிரிழந்தவரும் அவரது மகனும் வீதியோரமாக நின்றுள்ளனர்.

அவ்வேளை வீதியில் பயணித்த பேருந்து இருவரையும் மோதியுள்ளது. அதில் காயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், தந்தை உயிரிழந்துள்ளார். மகன் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

இளவாலைப் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

விபத்தினை ஏற்படுத்திய பேருந்துச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,33)

## யாழில் பேருந்...

நேற்று யாழிலிருந்து காரைநகர் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தில் சுழிபுரத்துக்குப் பயணித்துள்ளார்.

பேருந்து ஆனைக்கோட்டைப் பகுதியை அடைந்தவேளை முதியவர் சுயநினைவற்றிருப்பது அவதானிக்கப்பட்டதையடுத்து உடனடியாக மானிப்பாய் கிறின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அங்கிருந்து அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர் பேருந்திலேயே உயிரிழந்துவிட்டமை உறுதி செய்யப்பட்டது.

மரணம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மரண விசாரணைகளை யாழ்மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## முல்லை...

ழந்தவராவார்.

கண்டி, நுவரெலியாப் பகுதியில் இருந்து தொழில் நிமிர்த்தம் வந்த இருவர் முல்லைத்தீவு கொக்குளாய் கருநாட்டுகேணிப்பகுதியில் வாடியில் தங்கியிருந்துள்ளார்கள்.

குறித்த இருவரும் போதைக்கு அடிமையாகி இருந்த நிலையில் நேற்று மாலை வாய்த்தகராறு ஏற்பட்டு பின்னர் கைகலப்பாக மாறியநிலையில் நேற்று முன்தினம் இரவு நுவரெலியாப் பிரதேசத்தில் வசிக்கும் குடும்பஸ்தர் கண்டியில் வசிக்கும் மற்றைய நபரை அடித்துக்கொலை செய்துள்ளார்.

பின்னர் குறித்த விடயம் தொடர்பாக கொக்குளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நுவரெலியா மஸ்கெலிய பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய மற்றைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## தலைமன்னார்...

னம் மற்றும் காங்கேசன்துறை படகு சேவைகள் வெற்றிகரமாக தொடங்கப்பட்ட நிலையில், இந்தப் புதிய கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை 1914 ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டு வரை கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

பின்னர் ஏற்பட்ட காலநிலை சீர்கேடு மற்றும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் [illegible] மாகக் குறித்த கப்பல் சேவை நிறுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கை...

மூன்று நாள் விஜயமாக புதுடில்லியைச் சென்றடைந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அங்கு பிரதமர் மோடி உட்பட பலருடன் உயர்மட்ட சந்திப்புக்களை நடத்தினார்.

இதனையடுத்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, தனது விஜயம் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என வலியுறுத்தினார்.

மேலும், பிரதமர் மோடியை இலங்கைக்கு வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-7)

## யாழைச்...

லைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய குறித்த யுவதி அழகுக்கலை நிலையம் ஒன்றில் பயிற்சி பெற்று வரும் நிலையில் கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு இருந்துள்ளார்.

இந்த நிலையில் வழமை போன்று குறித்த யுவதி பிரயாணித்து தங்கும் இடத்துக்கு திரும்புகையில் வான் ஒன்றில் சென்ற குழுவினர் கட்டாயப்படுத்தி ஏற்றிச் சென்றுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த யுவதியின் கைப்பை மற்றும் தொலைபேசி ஆகியன கண்டெடுக்கப்பட்ட நிலையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் சமரவிக்ரம தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சம்பவம் திட்டமிட்டு இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில், பூர்வாங்க விசாரணைகள் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ம-7,100)

## இந்தியாவின்...

பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத்மாளிகையில்நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, இரட்டை வரி விதிப்பைத் தடுப்பது மற்றும் அரச அதிகாரிகளின் திறன் மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய -இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கைக்கு விசேடமான இடமுள்ளது என்பதை தாம் நன்கு அறிவதாகச் கூட்டுச் செய்தி யாளர் சந்திப்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நினைவுகூர்ந் தார்.

மேலும் இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணைப் பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 5687
S 9 0 5 6 9 3
அதிர்ஷ்ட சம்பத S 5 6 9 3
சீட்டிழுப்பு இலக்கம் 262
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1717
G 22 28 35 54 G
Double Chance 16004

மெகா பவர்
திகதி 16/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2035
K 17 04 14 40 54
018896

லக்கி 7 VIP
திகதி 2024.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 513
Y 3 8 8 0 6 6 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3929
சீட்டிழுப்பு திகதி 16.12.2024
V 25 31 38 57
V 149027
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 996
ரிஷபம் 12 18 40 59 ரிஷபம்
108110 29

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.12.2024 வெற்றி வாரம் 395
ஆங்கில எழுத்து L
மற்றும் வெற்றி இலக்கம் 3 3 9 1 0 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,338,808.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2661
சீட்டிழுப்பு திகதி 2024.12.16 தினம் திங்கட்கிழமை
01 06 32 67 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,206,422.40
DLB

சனிதா Shanida
திகதி 16.12.2024 வெற்றி வாரம் 4822
21 51 55 57 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,556,770.80
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4373
சீட்டிழுப்பு திகதி 16.12.2024 தினம் திங்கட்கிழமை
09 10 45 60 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,114,050.80
DLB

U 04 29 54 73 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,399,424.60
1837 16.12.2024 திங்கட்கிழமை
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.12.16 வெற்றி வாரம் 2086
05 39 42 53 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,818,550.00
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2487
சீட்டிழுப்பு திகதி : 2024.12.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,682,467.20
14 16 34 35 T
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சுனா எம்.பிக்கு நீதிமன்றால் பிணை

யாழ்ப்பாணபோதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை தொடர்பிலான வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் சட்டத்தரணி என். கௌசல்யா ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா மற்றும் சட்டத்தரணி என். கௌசல்யா ஆகியோர் அத்துமீறி நுழைந்து வைத்தியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை யாழ் . நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொளப்பட்ட போது, குற்றம் சாட்டப்பட்ட மருத்துவர் மற்றும் சட்டத்தரணி ஆகிய இருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, வைத்தியசாலைக்குள் பணிப்பாளரின் அனுமதி இன்றி அத்துமீறி நுழைதல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என சந்தேக நபர்களுக்கு அறிவுறுத்திய நீதவான், சந்தேகநபர்களை தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார். (ம-7)

# எலிக்காய்ச்சல் காரணமாக யாழில் 85 பேர் பாதிப்பு

எலிக் காய்ச்சல் காரணமாக யாழ். மாவட்டத்தில் 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 21 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 11 பேரும் சிகிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை மதியத்துடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 9 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் நான்கு பேரும் புதிதாக அனுமதிக்கப்பட்டு ள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் வவுனியா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட ஒருவரும் எலிக் காய்ச்சல் அறிகுறியுடன் நேற்று திங்கட்கிழமை(16) மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7,33,60)

## தெல்லிப்பழை...

ழந்தவராவார்.

குறித்த தாய் தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் சளி இருப்பதாகத் தெரிவித்து அளவெட்டி அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் மயக்கமுற்றுள்ளார்.

அவரை அவரது கணவன் உடனடியாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றவேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்பில் சந்தேகம் நிலவியதனையடுத்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனையில் உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாதமையினால் சடல மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பிலான விசாரணைகளைத் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## இலங்கை...

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம். அத்துடன் இலங்கை அரசியலமைப்பினை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியினை அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும் போதே இந்தியப் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இந்தியப் பிரதமர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்தியாவுக்கு நான் அன்புடன் வரவேற்கின்றேன். ஜனாதிபதியாக இந்தியாவுக்கு முதலாவது விஜயத்தினை மேற்கொள்வதற்கு நீங்கள் மேற்கொண்ட தீர்மானம் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றுவரை 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான நன்கொடை மற்றும் கடனுதவி இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுக்கும் நாங்கள் ஆதரவினை வழங்கி வருகினறோம். எமது பங்காளி நாடுகளின் அபிவிருத்தித் தெரிவுகளுக்கு அமைவாகவே எமது திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்த ஆதரவினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாகோ முதல் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதை சமிக்கைகள் மற்றும் காங்கேசன்துறை துறைமுக மீளமைப்புக்காக நன்கொடை அடிப்படையிலான ஆதரவினை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எமது கல்வி ரீதியான ஒத்துழைப்பின் அங்கமாக இலங்கையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு நாம் மாதாந்தப் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம்.

அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இலங்கையைச் சேர்ந்த 1500 சிவில் சேவை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

அத்துடன் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அனைவரையும் உள்ளடக்கிய தனது நோக்கு குறித்து என்னிடம் கூறியுள்ளார். தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம்.

அத்துடன் இலங்கை அரசியலமைப்பினை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியினை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அவரது முயற்சிகளில் இந்தியா உண்மையானதும் நம்பத்தகுந்துமான பங்காளியாக இருக்குமென நான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களிடம் உறுதியளித்துள்ளேன் என்றார். (ம-7)


வைத்தியம்
வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(640)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127




V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1818)

பணியாளர் தேவை
A/L படித்த ஆங்கில, கணனி அறிவுடைய அலுவலகப் பணியாளர்கள் உடனடியாகத் தேவை.
சுய விபரக் கோவையை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Rd, Jaffna.
tcnet2b@gmail.com
(641)

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759
(620)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org